குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உளுந்தூர்பேட்டை.

**முன்னிலை : திருமதி.வே.கோமதி, பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை.

2026-ம் ஆண்டு மே 26-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.128/2025**

**CNR.NO.TNKA10 -001357-2025**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>எலவனாசூர்கோட்டை காவல் நிலைய<br>குற்ற எண். 213/2024 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | எதிரிகள் பெயர் : 1.திரு. சீனுவாசன் (வயது 27)<br>த/பெ. வேலு<br>2.திரு. வினோத் (வயது 26)<br>த/பெ. சுப்ரமணியன்<br>3.திரு.முருகன் (வயது 25)<br>த/பெ. சுப்ரமணியன்<br>4.திருமதி.செல்வி (வயது 51)<br>க/பெ. சுப்ரமணியன்<br>5.திருமதி.வாணிஸ்ரீ (வயது 23)<br>க/பெ. வினோத் |
| குற்றப்பிரிவுகள் | 1-வது எதிரி மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)<br><br>2 மற்றும் 3 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)<br><br>4 மற்றும் 5 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3) |
| வனையப்பட்டது | 1-வது எதிரி மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)<br><br>2 மற்றும் 3 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3) |

| | |
|---|---|
| | 4 மற்றும் 5 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3) |
| தண்டிக்கப்பட்டது | இறுதியாக, 1–வது எதிரி பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1–வது எதிரி பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | சீனுவாசன் | வேலு | இந்து | கூலி | இந்திரா நகர், எலவனாசூர்கோட்டை, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி | 27 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | வினோத் | சுப்ரமணியன் | இந்து | கூலி | எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை | 26 |
| 3. | முருகன் | சுப்ரமணியன் | இந்து | கூலி | எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை | 25 |
| 4. | செல்வி | சுப்ரமணியன் | இந்து | கூலி | எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை | 51 |
| 5. | வாணிஸ்ரீ | வினோத் | இந்து | வீட்டுக்குடி தனம் | எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை | 23 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 29.07.2024 |
| புகார் | : | 29.07.2024 |
| கைது தேதி | : | A1–30.07.2024 |
| பிணை விடுவிப்பு | : | A1–This Court Bail order in Crl.M.P No.2632/2024 on 07.08.2024<br><br>A2, A3–Principal District and sessions Judge, Kallakurichi, anticipatory Bail order in Crl.M.P.No. 2669/2024 on 13.08.2024<br><br>A4, A5–Principal District and sessions Judge, Kallakurichi, anticipatory Bail order in Crl.M.P.No. 3550/2024 on 21.09.2024 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 07.08.2025 |
| வழக்கு விசாரணை முடிவு | : | 25.05.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | A1–30.07.2024–08.08.2024 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 27.03.2025 |
| Date of Questioning | : | 07.10.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | Compromise petition Mp.No. 2/2026 is dismissed on 20.05.2026 |

| | | |
|---|---|---|
| | | 311 Cr.P.C petition Mp.No 3/2026 is allowed on 22.05.2026 |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief Cross<br>1.20.05.2026 20.05.2026<br>2.20.05.2026 20.05.2026<br>3.20.05.2026 20.05.2026<br>4.22.05.2026 22.05.2026<br>5.22.05.2026 22.05.2026 |
| பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 (1)(b) – விசாரணை தேதி | : | 25.05.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது 27.03.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 25.05.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் உதவி வழக்குரைஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அந்தோணி ஆரோக்கியசெல்வன்., MA., BL., அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டப்பிரிவு 193–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 இளவரசி க/பெ பரஞ்சோதி என்பவர் மன்மதன் கோவில் தெரு, கீழப்பாளையம் எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை வட்டத்தில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

சாட்சி 1 ன் கணவர் சாட்சி 2 பரஞ்ஜோதி என்பவர் சிவன் கோவில் அருகே முடி திருத்தும் கடை வைத்து முடிவெட்டி வருகிறார். இந்நிலையில் கடந்த 26.07.2024 – ந் தேதி சாட்சி 1 யிடம் இவ்வழக்கின் எதிரி 1 சீனுவாசன் த/பெ வேலு என்பவர் அசிங்கமாக பேசியது சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 29.07.2024 ந் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் சாட்சி 2 தனது மகன் பரத் என்பவரை அரசினர் ஆண்கள் மேல் நிலைபள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி எதிரி 1 சீனுவாசன் என்பவர் அவரது உறவினர்களான 2. முருகன், 3. வினோத் 4. செல்வி, 5. வாணிஸ்ரீ ஆகிய அனைவரும் சாட்சி 2 யை வழிமறித்து 1 வது எதிரி சாட்சி 2 யை பார்த்து ஏய் அமட்ட தேவிடியா பையா நீ என் மீதே புகார் தறீயா என அசிங்கமாக திட்டியும் உடனே சாட்சி 2 ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு அருகில் இருந்த 2 வது எதிரி வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் சாட்சி 2 ன் தலையில் அடித்த போது சாட்சி 2 தனது வலது கையால் தடுத்ததால் சாட்சி 2 ன் வலது கை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டும் அவர்களுடன் இருந்த 3 வது எதிரி முருகன் என்பவர் இந்த தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது வலது காலில் அடித்தும் 1 வது எதிரி சீனுவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதில் சாட்சி 2 ன் இடது கையில் காயம் ஏற்பட்டும் உடன் இருந்த எதிரிகள் அனைவரும் மாறி மாறி கையால் அடித்தும் சாட்சியின் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியதும் அப்போது அங்கிருந்த சாட்சிகள் 3, 4, 5, 6 ஆகியோர்கள் சண்டையை மறித்த போது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த சாட்சி 2 க்கு உயிர் பயத்தை ஏற்படுத்தியும் சாட்சி 2 பரஞ்ஜோதி என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் சாட்சியின் வாகனத்திற்கு ரூ.10/– க்கு மேற்பட்ட தொகைக்கு சேதாரத்தை ஏற்படுத்தியும் குற்றமுறு வன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே எதிரி 1 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3) BNS எதிரிகள் 2, 3 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(2), 324(4), 351(3) BNS எதிரிகள் 4 மற்றும் 5 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3) BNS– ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என எலவனாசூர்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகள் முன்னிலையானவுடன் எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல் பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 263(1) –ன் கீழ் 1–வது எதிரி மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் மீது பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து 263(2)–ன் கீழ் எதிரிகளிடம் விளக்கி வினவிய போது எதிரிகள் பொய்வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணம் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :**

(1) அ.சா.1 திருமதி.இளவரசி தனது சாட்சியத்தில் "நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன்.ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். எதிரிகளுக்கும் என் கணவருக்கும் எந்த தகராறும் இல்லை. எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ–1 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திருமதி.பரஞ்ஜோதி தனது சாட்சியத்தில், "நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 யை தெரியும் அவர் என் மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். நான் என் குழந்தையை பள்ளிக்கு அழைத்து செல்லும்போது சிலநபர்கள் வழிமறித்து என்னை அடித்துவிட்டார்கள். எதிரிகளுக்கும்

எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் என்னை அடித்திருப்பார்கள் என்ற அனுமானத்தின்பேரில் எதிரிகள் மீது என் மனைவி புகார் கொடுத்தார். எதிரிகள் என் மனைவி வழி உறவினர்கள். எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம்.வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 திருமதி.சந்திரா தனது சாட்சியத்தில், "நான் கீழப்பாளையம் கிராமத்தில் வசித்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1, 2 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மருமகள் இளவரசி கையொப்பம் செய்தார். சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக நான் வீட்டில் இருந்தபோது போலிசார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்திற்கு வரசொன்னதால் அங்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 திருமதி.ஆனந்தி தனது சாட்சியத்தில், "நான் எலவனாசூர்கோட்டையில் வசித்து டிபன் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். அ.சா.1 –ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று எனக்கு நேரிட்டு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 திரு.சுந்தர்ராஜன் சிறப்பு உதவிஆய்வாளர் தனது சாட்சியத்தில், " நான் தற்போது எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்புஉதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திரு.சேட்டு அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது 30.07.2024 ம் தேதி 14.00 மணிக்கு இளவரசி க/பெ.பரஞ்சோதி என்பவர் கொடுத்த புகாரை பெற்று மனு இரசீது எண்.713/2024 வழங்கி, பின்னர் மனு ரசீதை பார்வையிட்டும் இளவரசி க/பெ பரஞ்சோதி கொடுத்த புகார் அ.சா.ஆ.3 ஆகும். நிலைய குற்ற எண். 213/2024 BNS .பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2),118(1), 324(4), 351(3) முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம்

சென்று சாட்சிகள் சந்திரா, வள்ளுவன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரியை தேடிச்சென்றதில் எதிரி சீனிவாசன் என்பவர் 30.07.2024 17–00 மணிக்கு எலவனாசூர்கோட்டை – ஆசனூர் ரோடு மேம்பாலம் அருகே நின்று கொண்டு இருந்தவரை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான இளவரசி, பரஞ்சோதி, ராஜதுரை, பிரியா, ஆனந்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் காயம்பட்ட சாட்சியான பட்டியல் சாட்சி 1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சதாவெங்கடேசன் அவரை சந்தித்து காயச்சான்று பெற்றார். மருத்துவர் அளித்த காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் அவர் சாட்சிகளை விசாரணை செய்ததிலும், மருத்துவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவான 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3) BNS என இருத்ததை பிரிவு மாற்றம் செய்து 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 118(2), 324(4), 351(3) BNS – ன் படி பிரிவு மாற்றம் செய்தார். அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். பின்னர் எதிரிகள் மீது 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 118(2), 324(4), 351(3) BNS – ன் கீழ் புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>6.பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 –ன் படியான நடவடிக்கை:–</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 351 (1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை பொய்சாட்சி என மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**<u>6(a) அரசு தரப்பில் வாதம் :</u>**

அரசு தரப்பில் 1–வது எதிரி மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 மற்றும் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 4 மற்றும் 5

எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் குற்றவாளிகள் எனவே, தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**<u>6(b) எதிரிகள் தரப்பில் வாதம்:</u>**

எதிரிகள் தரப்பில், புகார்தாரரும் எதிரிகளும் ஒரே ஊர்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பேசி சமாதானமாக செல்கிறோம் என சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளில் எவரும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை நிரூபிக்கும் வகையிலும் சாட்சியம் அளிக்கவில்லை, எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**<u>7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது 1–வது எதிரி மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 மற்றும் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2),324(4),351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 4 மற்றும் 5 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>8. தீர்வு :–</u>**

**(8.1)** இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 இளவரசி க/பெ பரஞ்சோதி என்பவர் மன்மதன் கோவில் தெரு, கீழப்பாளையம் எலவனாசூர்கோட்டை உளுந்தூர்பேட்டை வட்டத்தில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். சாட்சி 1 ன் கணவர் சாட்சி 2 பரஞ்ஜோதி என்பவர் சிவன் கோவில் அருகே முடி திருத்தும் கடை வைத்து முடிவெட்டி வருகிறார். இந்நிலையில் கடந்த 26.07.2024 – ந் தேதி சாட்சி 1 யிடம் இவ்வழக்கின் எதிரி 1 சீனுவாசன் த/பெ வேலு என்பவர் அசிங்கமாக பேசியது சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 29.07.2024 ந் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் சாட்சி 2 தனது மகன் பரத் என்பவரை அரசினர் ஆண்கள் மேல் நிலைபள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி எதிரி 1 சீனுவாசன் என்பவர் அவரது

உறவினர்களான 2. முருகன், 3. வினோத் 4. செல்வி, 5. வாணிஸ்ரீ ஆகிய அனைவரும் சாட்சி 2 யை வழிமறித்து 1 வது எதிரி சாட்சி 2 யை பார்த்து ஏய் அமட்ட தேவிடியா பையா நீ என் மீதே புகார் தறீயா என அசிங்கமாக திட்டியும் உடனே சாட்சி 2 ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு அருகில் இருந்த 2 வது எதிரி வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் சாட்சி 2 ன் தலையில் அடித்த போது சாட்சி 2 தனது வலது கையால் தடுத்ததால் சாட்சி 2 ன் வலது கை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டும் அவர்களுடன் இருந்த 3 வது எதிரி முருகன் என்பவர் இந்த தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது வலது காலில் அடித்தும் 1 வது எதிரி சீனுவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதில் சாட்சி 2 ன் இடது கையில் காயம் ஏற்பட்டும் உடன் இருந்த எதிரிகள் அனைவரும் மாறி மாறி கையால் அடித்தும் சாட்சியின் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியதும் அப்போது அங்கிருந்த சாட்சிகள் 3, 4, 5, 6 ஆகியோர்கள் சண்டையை மறித்த போது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த சாட்சி 2 க்கு உயிர் பயத்தை ஏற்படுத்தியும் சாட்சி 2 பரஞ்ஜோதி என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும் சாட்சியின் வாகனத்திற்கு ரூ.10/– க்கு மேற்பட்ட தொகைக்கு சேதாரத்தை ஏற்படுத்தியும் குற்றமுறு வன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே எதிரி 1 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3) BNS –ன் படியும், எதிரிகள் 2, 3 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(2), 324(4), 351(3) BNS–ன் படியும், எதிரிகள் 4 மற்றும் 5 ன் செய்கையானது சட்டப்பிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3) BNS –ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

(8.2) அ.சா.1 திருமதி.இளவரசி புகாரிலும், போலிசார் வாக்குமூலத்திலும், "29.07.2024 ந்தேதி காலை சுமார் 9.00 மணியளவில் எனது கணவர் பரஞ்ஜோதி என் மகன் பரத் என்பவரை அரசினர் ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி நபர்கள் அனைவரும் எனது கணவர் சென்ற இருசக்கர வாகனத்தை வழி மறித்து சீனுவாசன் என்பவர் எனது கணவரை பார்த்து ஏய் அமட்ட தேவிடியா பையா நீ என் மீதே புகார் தரறீயா என அசிங்கமாக திட்டினார் உடனே எனது கணவர் பரஞ்ஜோதி ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு அப்போது வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் இதோடு ஒழிந்து போடா என கூறி எனது கணவர் தலையில் அடித்தார். அப்போது

எனது கணவர் வலதுகையால் தடுத்தபோது வலதுகை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது எனது கணவர் வலது கையால் தடுக்காமல் இருந்தால் மேற்படி நபர் அடித்த அடி தலையில் பட்டு இருந்தால் இறந்தே போய் இருப்பார். உடன் இருந்த முருகன் இந்த தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது கணவர் வலது காலில் அடித்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அப்போது சீனுவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதில் இடது கையில் காயம் ஏற்பட்டது. அப்போது மேற்படி நபர்கள் அனைவரும் மாறிமாறி தாக்கியதாகவும் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியதும் அப்போது அங்கிருந்தவர்கள் சண்டையை மறித்தபோது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக எனது கணவர் பரஞ்ஜோதி செல்போன் மூலம் தகவல் சொல்ல நான் சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவரை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயளியாக சேர்த்தேன்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.1 அரசு தரப்பு முதல்விசாரணையில், "ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் என் உறவினர்கள். எதிரிகளுக்கும் என் கணவருக்கும் எந்த தகராறும் இல்லை. எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று, புகார் மற்றும் போலிசார் விசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியமளித்து அ.சா.ஆ.3 புகார் சங்கதிகளையும், அரசு தரப்பு வழக்கையும் உறுதிப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை.

(8.3) சம்பவ சாட்சியான அ.சா.2 திரு.பரஞ்ஜோதி போலிசார் விசாரணையில், "29.07.2024 ந்தேதி காலை சுமார் 9.00 மணியளவில் நான் என் மகன் பரத் என்பவரை அரசினர் ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி நபர்கள் அனைவரும் என்னை வழிமறித்து மேற்படி சீனுவாசன் என்பவர் என்னை பார்த்து ஏய் அமட்ட தேவிடியா பையா நீ என் மீதே புகார் தரறீயா என அசிங்கமாக திட்டினார் உடனே நான் ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு அப்போது வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் இதோடு ஒழிந்து போடா என கூறி எனது தலையில் அடித்தார். அப்போது நான் எனது வலதுகையால் தடுத்தபோது வலதுகை சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது நான் எனது வலது கையால் தடுக்காமல் இருந்தால் மேற்படி நபர் அடித்த அடி தலையில் பட்டு இருந்தால் இறந்தே போய் இருப்பேன் அவர்களுடன் இருந்த முருகன் இந்த தேவிடியா பையனை

உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் எனது வலது காலில் அடித்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அப்போது சீனுவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதில் எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது. அப்போது மேற்படி நபர்கள் அனைவரும் மாறிமாறி தாக்கியதாகவும் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தியதும் அப்போது அங்கிருந்த ராஜதுரை த.பெ ராஜேந்திரன், வள்ளுவன் த.பெ பாவாடை பிரியா க.பெ முரளி மற்றும் ஆனந்தி க.பெ ரமேஷ் ஆகியோர் சண்டையை மறித்தபோது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த சென்றனர்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.2 அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1 யை தெரியும் அவர் என் மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். நான் என் குழந்தையை பள்ளிக்கு அழைத்து செல்லும்போது சிலநபர்கள் வழிமறித்து என்னை அடித்துவிட்டார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் என்னை அடித்திருப்பார்கள் என்ற அனுமானத்தின்பேரில் எதிரிகள் மீது என் மனைவி புகார் கொடுத்தார். எதிரிகள் என் மனைவி வழி உறவினர்கள். எதிரிகளுடன் சமாதானமாக போய்விட்டோம்.வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

(8.4) பார்வை மகசர் சாட்சி அ.சா.3 திருமதி.சந்திரா அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1, 2 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மருமகள் இளவரசி கையொப்பம் செய்தார். சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக நான் வீட்டில் இருந்தபோது போலிசார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தார் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்திற்கு வரசொன்னதால் அங்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை " என்று சாட்சியம் அளித்து அ.சா.ஆ.5 பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை.

(8.5) கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 திருமதி.ஆனந்தி அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1 –ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று எனக்கு நேரிட்டு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக முரண்பட்டு பிறழ்சாட்சியம் அளித்து வழக்கு

சம்பவத்தை அனுசரித்து சாட்சியமளிக்கவில்லை.

(8.6) அ.சா.5 திரு. சுந்தர்ராஜன் காவல் சிறப்புஉ தவி ஆய்வாளரான புலன் விசாரணை அதிகாரி, ஆவணக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.எதிரிகள் தரப்பில் சமாதான மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து MP.No. 2/2026, 20.05.2026 – ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(8.7) அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து அ.சா.1 முதல் அ.சா.4 வரை உள்ள சாட்சிகள் புகார் மற்றும் போலிசார் விசாரணை வாக்குமூலத்திற்கும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பாடாக பிறழ்சாட்சியம் அளித்து வழக்கு சம்பவத்தையும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டையும் உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்காததும், சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்படாததும்,இதர சாட்சிகள் அரசு தரப்பில் டிஸ்பென்ஸ் செய்யப்பட்டுள்ளதும், அ.சா.5 ஆவணக்கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதும், 29.07.2024 –ந் தேதி எதிரிகள் கலகம் விளைவிக்கும் நோக்கத்துடன் கையில் ஆயுதங்களுடன் ஒன்று கூடி அ.சா.2–ஐ வழிமறித்தும் எதிரிகள் அனைவரும் கையால் அடித்தும், எதிரி 1 கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதில் அ.சா.2–க்கு காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் 2 மற்றும் 3 ஆகியோர் தாக்கியதில் அ.சா.2–க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் அ.சா.2–ன் இருசக்கரவாகனத்தை சேதப்படுத்தியும், கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வழக்கு சம்பவத்தையும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டையும் உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்காததும், ஆக, 1–வது எதிரி மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 மற்றும் 3 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 4 மற்றும் 5 எதிரிகள் மீதான பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால் 1–வது எதிரி பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது.

**இறுதியாக, 1–வது எதிரி பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1–வது எதிரி பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 324(4), 351(3)–ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b),115(2),118(2), 324(4), 351(3)–ன் கீழும், 4 மற்றும் 5 எதிரிகள் பாரதிய நீதிச்சட்டபிரிவுகள் 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 324(4), 351(3)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச்சட்டப்பிரிவு 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. வழக்கு சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மே திங்கள் 26 –ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.05.26 01:31:34 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

| | |
|---|---|
| **இணைப்பு :** | |
| **அரசு தரப்பு சாட்சிகள்:–** | |
| அ.சா. 1 | திருமதி.இளவரசி க/பெ பரஞ்ஜோதி |
| அ.சா. 2 | திரு.பரஞ்ஜோதி த/பெ ராமலிங்கம் |

| | |
|---|---|
| அ.சா. 3 | திருமதி.சந்திரா க/பெ ராமலிங்கம் |
| அ.சா. 4 | திருமதி.ஆனந்தி க/பெ ரமேஷ் |
| அ.சா.5 | திரு.சுந்தர்ராஜன் த/பெ தண்டபாணி (காவல் சிறப்பு உதவிஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 29.07.2024 | புகாரில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 30.07.2024 | பார்வைமகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 29.07.2024 | புகார் |
| அ.சா.ஆ. 4 | 30.07.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 5 | 30.07.2024 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ. 6 | 30.07.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 7 | 29.07.2024 | அ.சா.2-ன் காயச்சான்று |
| அ.சா.ஆ. 8 | 10.08.2024 | பிரிவு மாற்றல் அறிக்கை |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்**: இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள்** : இல்லை

**எதிரி தரப்பில் சான்றாவணம்** : இல்லை

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.26 01:31:46 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை

**நகல்கள்**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், கள்ளக்குறிச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் உளுந்தூர்பேட்டை

3.காவல் உதவிஆய்வாளர்,எலவனாசூர்கோட்டை காவல் நிலையம், உளுந்தூர்பேட்டை.

**குறிப்பு**

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.